நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

பகுதி - 5
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2047

திங்கள் இதழ்
விலை ரூ. 20
மே - 2017

நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி
கல்லூரிக்குழு

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.பாலகிருஷ்ணன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரம் - அகம் காட்டும் முகம் 6
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள "செய்யுளியல்" உரை
பேராசிரியர் ப.மருதநாயகம் 11

4. இலக்கண நிறைவும் இலக்கண வரைவும்
பேராசிரியர் இரா.கோதண்டராமன் 20

5. திருக்குறளின் சுருக்கம்
தமிழாகரர் தெ.முருகசாமி 26

6. தொல்காப்பிய மரபில் அக இலக்கிய அறக்கொள்கைகள்
முனைவர் வாசுகி ஜெயரத்னம் 32

7. சங்கச் செயதிகள் 39

வலைதளம்: www.maduraitamilsangam.com
: www.senthamilcollege
மின்னஞ்சல் : maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள் கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

பிள்ளையார் துணை, கருப்பணசாமி துணை, மாரியம்மன் துணை என வழிபட்டுக் கழுவாய் தேடுவார் ஒரு பக்கமும், காக்க ஒழுக்கம், தெரிந்து தேரினும் அதுவே துணை என அறம் துணை என்பார் மறுபக்கமுமாக இருவேறு இயக்கங்கள் உள்ளன. "எனைப் பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை வீயாது பின் சென்று அடும்" என வள்ளுவரும் கூறுகிறார். சங்க காலத்தில் "உயிர் முறை வழிப்படும் என்பது திறவோர் காட்சியில் தெளிந்தனம்" எனக் கணியன் பூங்குன்றனார் குறிப்பிடுவது இன்னும் சற்று ஆழமான பொருண்மை உடையது. திறவோர் என்றும் காட்சி என்றும் அவர் குறிப்பிடுவது கணியன் பூங்குன்றனார் கூற்று மட்டுமல்ல; ஏற்கனவே முன்னையோர் முடிவு என வலியுறுத்துகின்றார்.

ஒருவன் செய்த வினை தனது பயனை வழுவின்றிப் பயத்தல் அறத்தினாகுமாதலான் ஊழ்அறத்தின் இறுதிக் கண் கூறப்பட்டது என்று மணக்குடவரும், ஊழ்–பழம்பிறப்புக்களில் செய்யப் பெற்ற இருவினைகளின் பயன் செய்தவனையே சென்றடையும் இயற்கையொழுங்கு எனத் தேவநேயரும், அவாவறுத்தலோடு உடனறுவது ஊழ் ஆதலின் அவா வறுத்தலின் பின் வைக்கப்பட்டது எனப் புலவர் குழந்தையும் குறிப்பிடுகின்றார்கள். இவர்களின் கூற்றை உற்றுநோக்க ஊழ் என்பது அறம் என்பதும் அது இயற்கை ஒழுங்கு என்பதும் எண்ணத் தக்கது. இவை நிற்க.

தமிழறிஞர் இளங்குமரனார், சிலப்பதிகாரம் "அகம் காட்டும் முகம்" என்னும் கட்டுரையில் சிலம்பு அதிகாரம்; சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டு பெற்றது வலிக்கும் வழி வலித்தல் அல்ல; வலியா வழி வலித்தல் எனக் குறிப்பிடுகிறார். ஆசிரியர் இளங்கோவடிகள் வலிந்து தம் முடிவை வலியுறுத்தும் முகமாகச் சிலம்பு, சிலப்பு ஆனது என எடுத்துரைக்கும் கருத்துக்கள் உற்றுநோக்கத்தக்கது. இந்தியப் பண்பாடு என்பது சமயம் சார்ந்த சிந்தனை மரபாகப் பரவலாக வாழ்க்கையோடு பிணைந்திருப்பதும், ஒரு காரணமாகலாம். சமயம் சாரா அறக்கோட்பாடு, பண்பாடு, நாகரிகம் என்பன இந்திய மரபில் வளராததால் சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற தளங்களில் மக்கள் சிந்தனை அறிவு சார்ந்ததாக இல்லாமல் சமயம் சார்ந்ததாக வளர்ந்து வருவது சிந்திக்கத்தக்கது.

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் எழுதிய நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள செய்யுளியல் உரை என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. அதன் முன் பகுதி இந்த இதழிலும் பிற்பகுதி அடுத்து வரும் இதழிலும் இடம் பெறும். கட்டுரை ஆசிரியர், அரிதின்முயன்று நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள செய்யுளியலில் உள்ள பிழைகளைச் சுட்டி, இவ்வுரை அவருடைய பெயரில் வேறு ஒருவர் எழுதியது என்பதை விளக்கமாகச் செய்யுள் எண்களுடன் எழுதியுள்ளார்.

பேராசிரியர் தெ.பொ.மீ.பேராசிரியர் மு.வ.போன்ற அறிஞர்கள் கலந்தரையாடிய காலத்தில் தொல்காப்பிய ஆய்வுக்கெனக் குழு அமைத்து வழுவின்றி வெளியிடும் மையம் தேவை என எண்ணினர். ஆனால் மேலை

நாடுகளில் அரிசுடாட்டில் போன்ற அறிஞர்களுடைய நூல்களுக்கும் கிரேக்கக் காப்பிய ஆசிரியர் கோமர் போன்றோர் நூல்களுக்கும் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேலைநாடுகளில் தலைசிறந்த பல்கலைக் கழகங்கள் தனிக்கல்வி மையங்கள் அமைத்துத் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்கின்றன. பல்கலைக்கழகங்கள் செய்கின்ற பணியை பேராசிரியர் ப.மருதநாயகம் தனியொருவராகச் செய்து வருகின்றார். அப்பெருமகனார்க்கு தமிழக அரசும் அரசியலாரும் துணை நின்று உதவியாளர்களை அமைத்தும் பிற வகைகளிலும் உதவலாம்.

இலக்கண நிறைவும் இலக்கண வரைவும் :

'மொழியாராய்ச்சி என்பது பேசுபவரை மையமாகக் கொண்டதாகும். மரபு இலக்கணங்கள் பேசுபவரைத் தவிர்த்து மொழியை மையமாகக் கொண்டதால் மொழி பற்றிய அமைப்பியல் சார்ந்த உண்மைகளை விளக்கத் தவறிவிடுகின்றன. மனித சிந்தனையும் அறிவின் பரப்பும் மொழியை வெகுவாகப் பாதிக்கின்றன. இத்தகைய பாதிப்புகளை இலக்கணம் பிரதிபலிக்க வேண்டும். வளர்ந்து வரும் சமுதாயத்தில் மொழியில் நிகழும் மாற்றங்கள் தவிர்க்க முடியாததாகும். அதற்கு ஏற்ப இலக்கணம் மொழியை மட்டும் கருத்தில் கொள்ளாமல் மொழியைப் பேசுவோரையும் கருத்தில் கொண்டு அதன் கட்டமைப்பை வகுப்பதற்கு முன் வருவது மொழியைப் பாதுகாப்பதற்கு இன்றியமையாத சிந்தனை என்பதைப் பேராசிரியர் இரா. கோதண்டராமன் *"இலக்கண நிறைவும் இலக்கண வரைவும்"* என்னும் கட்டுரையில் எடுத்துரைக்கும் செய்தி தமிழ் இலக்கண ஆய்வாளர்களும் தமிழ்ப் பாதுகாப்புப் பணியில் நாட்டமுடைய அறிஞர்களும் உள் வாங்கிக் கொள்ள வேண்டியதாகும். வளர்ந்துவரும் சமுதாயத்தில் மாற்றம் என்பது தவிர்க்க முடியாததாகும்.

பேராசிரியர் தெ.முருகசாமி, *"திருக்குறளில் சுருக்கம்"* என்னும் தலைப்பில் இலக்கியம் வாழ்க்கையைச் சுருக்கமாக வெளிப்படுத்தும் கருவி. அதனை நுண்ணிதின் உணரும் அறிவுடையோர் உணர்க; உணரத்தவறிய அரசியலார் முறைகேட்டால் உழவுத்தொழில் அழிந்து வருவதும் அதனால் பெரும்பான்மையும் உழவைத் தொழிலாகக் கொண்டிருக்கும் நாட்டு மக்கள் நசிந்து அழிவர் என்பதையும் உணர்த்தும் உண்மை போற்றத்தக்கது. வேலொடு நின்றான் இடு என்றது போலும் சுருக்கம் உணர்வுடையார் புரிதற்குரியது. இந்தியநாடு விடுதலை அடைவதற்கு முன்பு தமிழகத்தில் நிலம் வைத்திருந்த உழவர்களிடமிருந்த நிலங்கள் கைமாறி புதிய பண்ணையார்கள் வந்துவிட்டனர். உழவுத்தொழிலை பரம்பரையாகச் செய்து வந்த உழவர்கள் நிலை என்ன? பொருளாதார ஆய்வு தேவை. பொருளாதாரப் பேராசிரியர்கள் மாணவர்கள் ஆய்வுக்குரிய பகுதியாகும்.

பேரோசிரியர் திருமதி வாசுகி செயரத்னம் எழுதிய *"தொல்காப்பிய மரபில் அக இலக்கிய அறக்கொள்கைகள்"* என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. காதல் கற்பு என்பது அறத்தின் அடிப்படையில் வளர்வது; வாழ்க்கை முழுமை பெறுவது அறத்தின் சிறப்பினால் என்று உணர்ந்த தமிழ் மக்கள் அறம் சிதையாக்காதலைக்களவு என்று இலக்கியம் படைத்தனர். இன்று பொய்யும் வழுவும் இளம் உள்ளங்களைப் பாழ்படுத்தாமல் காத்து ஒழுகக் கற்றுத் தருவது ஊடகங்களின் கடப்பாடாகும்.

சிலப்பதிகாரம்–அகம் காட்டும் முகம்

(1) முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

'சிலப்பதிகாரம்' என்பது காப்பியப் பெயர். சிலம்பு+அதிகாரம்=சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்னும் பெயர் பதிகத்தின் 59ஆம் அடியிலும் நூற்கட்டுரையின் 18ஆம் அடியிலும் இடம் பெறுகின்றது.

சிலப்பதிகாரத்தில் *'சிலம்பு'* என்னும் சொல் 40 இடங்களில் இடம் பெறுகின்றது. பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய பதினெட்டு நூல்களிலும் 123 இடங்களில் *'சிலம்பு'* என்னும் சொல்லாட்சி உள்ளது.

இவ்விடங்களுள் எவ்வோர் இடத்தும் *'சிலப்பு'* என்னும் சொல் இடம் பெறவில்லை.

சிலம்பு என்பதில் உள்ள *'ம்'* ஆகிய மெல்லினம், *'ப்'* ஆகிய வல்லினமாக வருதல் செய்யுளில் உண்டு என்று கொள்ள வாய்ப்புண்டு.

"அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை
வலிக்கும் வழி வலித்தலும் *மெலிக்கும் வழி மெலித்தலும்*
விரிக்கும் வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்
நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும் வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்" (சொல். 403)

என்பது *தொல்காப்பியம்.* இதன்படி, வலிக்கும் வழி வலித்தலாய்க் கொள்ளலாமா என ஆராய வேண்டும்.

'இவ்வறுவகை விகாரமும் இன்றுழியாம் என்று வரையறுக்கப்படா; செய்யுள் செய்யும் சான்றோர் அணிபெற நாட்டலைத் தமக்கு வலியாகவுடைய செய்யுளின்பம் பெறச் செய்வான் நாட்டுதலை வலியாக உடைய' என்பார் *சேனாவரையர்.*

"மெல்லெழுத்தினை வல்லெழுத்தாகத் தொடுக்க வேண்டும் வழி வல்லெழுத்தாகத் தொடுத்தல்" என்பார் *தெய்வச்சிலையார்.*

'முந்தை' என்பதை *'முத்தை'* என்று வழங்கும் தொல்காப்பியம் (சொல் 194).

'குறுங்கை' என்பதைக் *'குறுக்கை'* என்று வழங்கும் ஐங்.266.

'பரம்பு', 'பரப்பு' என்றும்; *'வரம்பு', 'வரப்பு'* என்றும்; *'கரும்பு', 'கருப்பு'* என்றும்; *'இரும்பு' 'இருப்பு'* என்றும்; இருவகை வழக்குகளிலும் பெருக வழங்குகின்றன.

குரங்கு என்பதைக் *குரக்கு* எனக் காட்டல் முறையாகாது. குரக்கு என்பதே குரங்கு ஆயது. *'குர்க்குர்'* என்று ஒலிக்கும் அதனைக் குர்க்கு, *'குரக்கு'* என்று சொல்லிக் *'குரங்கு'* என நிலைத்து விட்டது. அதன் ஒலியே இதனை மெய்ப்பிக்கும் சான்று.

"சிலப்பதிகாரம் : இப்பெயர் *'மென்றொடர்க் குற்றியலுகரம் இயல்பு கணத்துக்கண் திரிந்து வந்தது"* என்கிறார் நச்.(குற்.9).

சிலம்பு முன் *குன்றம், சாரல், தடை, பள்ளம்* என்பது போல க,ச,த,ப வல்லினம் *'சிலப்பதிகாரம்'* என்னும் புணர்ப்பில் வந்திலது. *'அ'* கர உயிரே வருமொழி முதல் ஆயது. இதனை, *"விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்"* என்னும் விதியால்,

"ஒற்றென்ற மிகுதியான் இயல்பு கணத்துக்கண்ணும் *குரக்கு ஞாற்சி, நிணம், முகம், விரல், உகிர்* என மெல்லொற்றுத் திரிந்து வருமாறு கொள்க; சிலப்பதிகாரம் என்பதும் அது" என்கிறார். நச்.(எழுத்.குற்.9).

சிலம்பு என்னும் சொல் சிலம்பிலோ, அதற்கு முந்து நூல்களாகக் கிடைத்துள்ள நூல்களுள்ளோ *'சிலப்பு'* என வலிக்கும் வழி வலித்தல் என்னும் இலக்கணம் பெற வரவில்லை.

நூற்பெயர் சொல்லும் இடங்கள் இரண்டில் மட்டுமே *'சிலப்பு அதிகாரம்'* என வந்தமை *'ஒரு குறிப்பை உள்ளடக்கிய ஆட்சியாக இருக்க வேண்டும்'* என்று கொண்டு சிந்தித்தல் முறை. மற்றும் வரம்பு, வரப்பு; பரம்பு பரப்பு என்பவை போல, மக்கள் வழக்கிலும் சிலம்பு சிலப்பு என *என்றும் எங்கும் வழங்கப்பட்டதில்லை* என்பதையும் எண்ண வேண்டும்.

கால் அணியாகிய சிலம்பு, ஒலி வகையால் பெற்றது இப்பெயர். இவ்வாறே கோலெடுத்து ஆடும் *சிலம்பாட்ட*மும் ஒலிவழிப்பட்டதே. மேலும், பல்வகை ஒலிக்கு இடமாகவும், எதிரொலி தருவதாகவும் உள்ள மலையைச் சிலம்பு எனல் அறியலாம். அதன் மெல்லொலி விளங்க,

"தினைச் ***சிலம்புவ*** தீஞ்சொல் இளங்கிளி;
நனைச் ***சிலம்புவ*** நாகிள வண்டு; பூம்
புனைச் ***சிலம்புவ*** புள்ளினம்; வள்ளியோர்
மனைச் ***சிலம்புவ*** மங்கல வள்ளையே"

எனக் கம்பர் (பால.63) இசைக்கிறார் இம்மென்சிலம்புக்கு வலித்தல் (வன்மை) ஏற்றியது ஏன்? *'வலித்தல் விகாரம் பெற்றது' என்று, இலக்கணம் கூறுவதற்காகவா?*

இளஞ்செல்வியர் காலணி தண்டை; அவர் குமரிநிலையடையும் போது அணிவது, சிலம்பு; அச்சிலம்பு மணநாளுக்கு முன் நாள் கழற்றப்படும். அக்கழற்றுதல் நிகழ்வு, *'சிலம்பு கழி நோன்பு'* எனப்பட்டது. மகளிர் காலில் சிலம்பு உள்ளமை, இல்லாமை கொண்டே மணமானவர், மணமாகாதவர் என அறிந்து கொள்ள வாய்த்த காவல் ஏற்பாடு அஃதாம்.

கண்ணகியார் காற்சிலம்பு காலில் இல்லை; ஏனெனில், சிலம்பு கழி நோன்பு நிறைந்து *'மண அணி'* பூண்டவர் அவர். காலணிகலம் கழற்றி, கழுத்தணி பூண்ட நிலை அது ஆதலால், சிலம்பு காப்புப் பெட்டகத்தில் இருக்கும் பொருளாயிற்று. அச்சிலம்பு பொருளாக ஈட்டும் திட்டம் கொண்டே மதுரைக்குக் கிளர்ந்தனர் கோவல கண்ணகியர். *'வான் பொருட் குன்றம் தொலைந்தது'* என வருந்திய கோவலனிடம், *'சிலம்புள கொண்ம்'* என்னும் *கண்ணகி வாக்கே சிலம்பு சிலப்பதிகாரத்தில் முதற்கண் தலைகாட்டும் இடமாம்!*

சிலம்பு ஒலி செய்தலைச் சிலப்பதிகாரம்,

'சிலம்புவாய் புலம்ப'

என்கிறது. அஞ்சி அலமந்து ஓடுவாரை,

"நூபுரம் புலம்பிடச் சிலம்பு நொந்தழக்
கோபுரந்தொறும் குறுகினார் சிலர்"

என்பார் கம்பர் (உயுத்.3897).

இவற்றொடு தொல்காப்பியர், *'புலம்பே தனிமை'* என்பதை நோக்க ஓர் உள்ளீடு புலப்படுகின்றது. சிலம்பு முதலாகச் சென்ற கலன் ஈட்டச் செல்லும் கோவலன், *ஒற்றைச் சிலம்பைப்* பெற்றுச் செல்வானேன். ஒற்றை மிதியடி கேட்பாரார்? தருவாரார்? கண்ணகியார் சிலம்பு பயன்படுத்தார். பிறர்க்குத் தர நேரினும் ஒன்றைத் தாரார்; பெறார். பெறினும் பயனும் கொள்ளார்.

இணை பிரியா இரட்டை, இணை பிரித்து விற்கச் செல்லல் கோவலன் வரலாற்றில் அன்றி உண்டோ? கோவலன் விலையிடக் கொண்டு சென்றது ஒற்றைச் சிலம்பு எனின், களவு கோள்பட்ட சிலம்பும் ஒன்றாக இருந்தது ஏன்?

கள்வனுக்கு இரண்டில் ஒன்றை எடுக்க நேர்ந்தது என்ன?

எந்தக் கால் சிலம்பைக் கோவலன் விற்கக் கொண்டு சென்றானோ, அதே காற்சிலம்புதான் களவாக வேண்டுமா?

சிலம்புகளுள் வலக்கால் சிலம்பு, இடக்கால் சிலம்பு எனத் தனித் தனி அமைப்பு உண்டு அல்லவோ, மிதியடியைப் போல!

மீண்டு வந்த சிலம்பு கண்டு, *'தன்தேவி சிலம்'*பென *மன்னன் மயங்கலாம்!* அதற்குடைய *மாதேவியும் மயங்கிப் போய்த்* தன் சிலம்பெனக் கொள்வாளா! கொண்டாளே எதனால்?

மன்னவன் தேவி அணி சிலம்பும், *வாணிகன் தேவி* அணி சிலம்பும் ஒத்ததென அமைய ஓரிடத்து ஒருவரால் செய்யப்பட்டதா? இல்லையே!

கோவலன் சிலம்பும் கோவேந்தன் சிலம்பும் முறையே *புகார்* நகரிலும், *மதுரை* நகரிலும் உள்ள வெவ்வேறு பொன் வினைஞர்களால் அல்லவோ செய்யப்பட்டவை.

உள்ளிடு *'பரல்'* புலப்படாதொழியினும், புறத்தோற்றம் கலைநிலை அளவுப்பாடு என்பனவெல்லாம் *ஒத்தியல நேர்ந்தமை ஏன்?*

பழிவழிப் படாஅப் பஞ்சவன் பழிக்கு ஆட்படவா இவை? அறவோர் அவையம், ஆயம், அமைச்சு என்பவை எல்லாம் எட்டாதொழியக், கரவே காவல் கடன் கொண்டது போலக் குற்றம் சாற்றியவனிடமே, *'கொன்றச் சிலம்பு கொணர்க'* என ஏவ ஓர் ஊடல் தவிர்ப்புத் தானா் இடமாக வேண்டும்?

இளங்கோவடிகள் சார்ந்த *சமண் சமயப் பிறப்புக் கோட்பாடு–வினைக்கோட்பாடு*–ஈர்த்துச் செல்ல முன்னை வினை முடிச்சுப்போட்டு முடிக்கிறார்! *'ஊழ்'* என்பதனொடு *'வினை'* என்பதை இணைத்த *முதல்வர்–முன்னவர்–இளங்கோவடிகளேயாவர்.* அவர் நூலுக்கு முன்னை நூல்களில் ஊழ் என்னும் சொல் 96 இடங்களில் இடம் பெற்றிருந்தும், வினை ஒட்டவில்லை. அடிகள் ஊழ்வினை என இணைத்ததுடன், *"ஊழ்வினை வந்து உருத்து ஊட்டும்"* என்று நூலியல் நோக்கையும் உரைத்தார். சிலப்பதிகாரம் என *வல்லொற்றிட்டு* அதிகாரப்படுத்தினார். ஏன்?

1. கோவலன் கொல்லப்பட்டான்.
2. பாண்டியன் தேவியொடு முடிந்தான்.
3. கண்ணகி விண்ணகம் சென்றார்.

4. மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டனர்.

5. கோவலன் தாயும் கண்ணகி தாயும் இறந்தனர்.

6. கோவலன் தந்தையும் கண்ணகி தந்தையும் துறவு பூண்டனர்.

7. நற்றுணையாய் வந்த துறவு மூதாட்டி,
காவுந்தி ஐயை பாடுகிடந்து உயிர் துறந்தார்.

8. தெய்வக் கோலம் கண்ட ஆயர்முதுமகள் மாதரி,
எரிவளர்த்து இறந்தாள்

9. மதுரை எரியுண்டது!

10. பொற் கொல்லர் உயிர்ப்பலி ஊட்டினர்.

11. மாடல மறையோன் *'தீர்த்த யாத்திரை'* சென்றான்.

12. செங்குட்டுவன் தன்னொத்த வேந்தனுக்கு
நேர்ந்த தெண்ணி நைந்தான்!

13. கனகவிசயர் கதிர்த்தலை முடியைக்
கல் நெரித்தது.

14. கங்கைப் போரில் செங்குருதி வழிந்தது!
ஒற்றைச் சிலம்பின் – ஆம்!
மென் சிலம்பின் விளைவுகளா இவை?
அச்சிலம்பின் கொடுமையை நெற்றிப்
பொட்டென இட்டுவைக்கவே
இளங்கோ வடிகள்
'சிலப்பதிகாரம்' எனப் பெயர்ச்சூட்டு
நிகழ்த்தினர் என்க.
சிலம்பு செய்த வன்கொடுமைகளையெல்லாம்
அகத் தடக்கிய முகக் குறியீடே
'சிலப்பதிகாரம்'
என்னும் பெயரீடாம் என்க.

*இது முந்தையர் கண்டதும் காட்டியதுமாம் வலிக்கும்வழி வலித்தல் ஆகாமல், வலியாவழி வலித்தல் எனப் பெயரீடு பெற வேண்டுவதாம்.

நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள "செய்யுளியல்" உரை

பேராசிரியர் **ப.மருதநாயகம்,**
ஆய்வு அறிஞர், நடுவண் அரசு
செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
100 அடிசாலை, தரமணி, சென்னை–600 113
கைபேசி :94427 87727

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கான உரை, பேராசிரியர் பெயரிலும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தின் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல் ஆகியவற்றிற்கான உரை நச்சினார்க்கினியர் பெயரிலும் வழக்கில் உள்ளன. பொருளதிகாரம் முழுமைக்கும் பேராசிரியர் எழுதிய உரையென்ற குறிப்புடன் ஒரு கையெழுத்துப்படி இலண்டன் பிரிட்டிசு நூலகத்தில் உள்ளது. இரண்டாண்டுகளுக்கு முன் 'பேராசிரியர்' என்ற பெயர் அடிக்கப்பட்டு 'நச்சினார்க்கினியர்' என்ற பெயர் எழுதப் பட்டிருந்தமையையும் நான் காண முடிந்தது தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையைப் பதிப்பித்த அறிஞர் வ.உ.சிதம்பரனார் தமது முன்னுரையில் பேராசிரியரின் முழுப் பொருளதிகாரத்திற்கான உரையைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெளியிடுமென்று குறிப்பிட்டுள்ளார். முதலில் பேராசிரியர் உரை என்று கருதப்பட்டதை நச்சினார்க்கினியர் உரையென்று ரா.ராகவஅய்யங்கார் கூறியதாகவும் சொல்லப்படுகிறது. இவை பற்றிய உண்மை எதுவாயினும் பொருளதிகாரச் செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள உரை அவரால் எழுதப்பட்டிருக்க முடியாதென்பதையும் அவர் காலத்திற்குப் பின் யாரோ அரைகுறையான கல்வியறிவு பெற்ற ஒருவர் பேராசிரியர் உரையை முற்றும் தழுவி, ஏராளமான பிழைகளுடன் நச்சினார்க்கினியர் பெயரில் வெளியிட்டிருக்க வேண்டுமென்பதையும் அவ்வுரையினை ஆழ்ந்து படிப்போர் உணரலாம்.

நச்சினார்க்கினியர் பெயரில் செய்யுளியலுக்குத் தரப்பட்டுள்ள உரையில் பிழைகள் மலிந்திருக்கக் காணலாம். இவையெல்லாம் ஏடெழுதுவோரால் செய்யப்பட்ட தவறுகள் என்று சொல்ல முடியாது என்பதை வெள்ளைவாரணனார் செய்யும் திருத்தங்களால் அறியலாம்.

"மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 1)

உரை : அது கூற்றும் ***குறியும்*** என வருதலின் வகையென்றார்.

திருத்தம் : அது கூற்றும் ***குறிப்பும்*** என வருதலின் வகையென்றார்.

உரை : "ஏகாரங்கள் எண்ணுப் பொருட்டு"

திருத்தம் : ஏகாரங்கள் எண்ணுப் பொருள

"முற்றிய லுகரமும் மொழி சிதைத்துக் கொளாஅ"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 8)

உரை : "நாகுண்டு என்பது குற்றுகரமாகாது"

திருத்தம் : இத்தொடர் நூற்பாவோடு தொடர்பின்றிக் காணப்படுகிறது.

"ஈரசை கொண்டு மூவசை புணர்த்தும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 10)

உரை : ***"ஈரசைச் சீர்*** கொண்டன"

திருத்தம் : ***இவை*** ஈரசை கொண்டன.

"இசைநிலை நிறைய நிற்குவ தாயின்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.26)

உரை : இவை ***ஓரோவோரோ***சைக்குக் காட்டிற்றேனும் ஒழிந்த அசைகட்குங் கூறிக் கொள்க.

திருத்தம் : இவை ***ஒவ்வோ***ரசைக்குக் காட்டிற்றேனும் ஒழிந்த ஓசைகட்குங் கூறிக் கொள்க.

"இன்சீ ரியைய வருகுவ தாயின்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.29)

உரை : இனிய ஓசை பொருந்த ***வரும்*** ஆசிரிய வடிக்கண் வெண்சீரும் வரப்பெறும்.

திருத்தம் : இனிய ஓசை பொருந்த ***வரின்*** ஆசிரிய வடிக்கண் வெண்சீரும் வரப்பெறும்.

"அடி இறந்து வருதல் இல்லென மொழிப"

எனத்தொடங்கும் நூற்பா (எண் 33)

உரை : தளைவகை ***யொன்றுதலிற்*** றொடைப் பகுதியுட் படாவாயிற்று.

திருத்தம் : தளைவகை ***யொன்றுதலின்மையிற்*** றொடைப் பகுதியுட் படாவாயிற்று.

"எழுத்தள வெஞ்சினும் சீர்நிலை தானே"

எனத்தொடங்கும் நூற்பா (எண் 41)

உரை : அலகு ***பெறுதலின்*** இருநிலைமை எய்திற்று.

திருத்தம் : அலகு ***பெறுதலின்மையின்*** இரு நிலைமை எய்திற்று

"ஐவகை அடியும் விரிக்குங் காலை"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 48)

உரை : ஓசையைக் ***கடக்கு*** மாறின்மையின்

திருத்தம் : ஓசையைத்***தட்கு*** மாறின்மையின்

"ஐவகை அடியும் ஆசிரியக் குரிய"

எனும் நூற்பா (எண் 50)

உரை : இவ்வாறு ஓராசிரியத்துக்கண் ஐந்தடியுங் கூறின முறையே நிற்கவேண்டுமென ஓதினமையின்

திருத்தம் : இங்ஙனம் ஓராசிரியத்துக்கண் ஐந்தடியுங் கூறின முறையே நிற்க வேண்டும் என ***வரையாது*** ஓதினமையின்

"தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 52).

உரை : ***அசை*** ஓரடிக்கு இரண்டுவந்து தட்டாலும்

திருத்தம் : ***அவை*** ஓரடிக்கு இரண்டு வந்து தட்டாலும்

"குறளடி முதலா அளவடி காறும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.54)

உரை : பின்னர் ஈற்றி***னிரை*** உரியசை யொன்றனையும்

திருத்தம் : பின்னர் ஈற்றி***னின்ற*** உரியசை யொன்றனையும்

"அளவும் சிந்தும் வெள்ளைக் குரிய"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.55)

உரை : முச்சீரான் வரும் ஈற்றடியு ***முதலிய*** மூன்று நிலத்தின்

திருத்தம் : முச்சீரான் வரும் ஈற்றடியும் ***ஏழெழுத்து முதலிய*** மூன்று நிலத்தின்

"வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண். 60)

உரை . கொச்சகக் க்லிக்கு ***ஐஞ்சீரடியும்*** வருமாறு கொள்க.

திருத்தம்: கொச்சகக் கலிக்கு ***இருசீரடியும்*** வருமாறு கொள்க.

"முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும்"

எனும் நூற்பா (எண்.63)

உரை : எழுசீரடிக்கும் ஐஞ்சீரடிக்கு முன்னின்ற அறு சீரடிக்கும் ஐஞ்சீரடிக்கும் இம்முடுகியல் நீக்கார்.

திருத்தம்: எழுசீரடிக்கும் ***முன்னின்ற*** அறுசீரடிக்கும் ஐஞ்சீரடிக்கும் இம்முடுகியல் நீக்கார்

"வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.69)

உரை · "சோழ னுறந்தைக் கரும்***பினிது***"

திருத்தம் . "சோழ னுறந்தைக் கரும் ***பெளிது***"

"நிரையவண் நிற்பின் நேரு நேர்பும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண். 71)

உரை : பாதிரி, கணவிரி நிரையீற்றியற் சீரோடும் நேரசைச் சீரோடும் நேர்பசைச் சீரோடும் தட்டன.

திருத்தம்· பாதிரி, கணவிரி ***என்னும்*** நிரையீற்றியற்சீர் ***நின்று*** நேரசைச் சீரோடும் நேர்பசைச் சீரோடும் தட்டன.

"மரபே தானும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.76)

உரை : அதோனி, இதோனி, உதோனி, குயின் என்றாற் போல்வன ***இடைச்*** சங்கத்திற் காகா வாயின.

திருத்தம் : ***கடைச் சங்கத்திற்*** காகா வாயின.

"*தூக்கியல் வகையே ஆங்கென மொழிப*"

எனும் நூற்பா (எண்.83)

உரை : இங்ஙனம் தூக்***கின்றென***

திருத்தம் : இங்ஙனம் ***தூக்கின்றேல்***

உரை : தூக்குத் ***துணிந்திர***ண்டனையும்

திருத்தம் : தூக்குத் ***துணித்திர***ண்டனையும்

தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்

எனும் நூற்பா (எண்.98)

உரை : அதனோடு ***அறுநூற்று*** நான்கனையுங் கூட்டியும்

திருத்தம் : அதனோடு ***அறுநூற்றிருபத்து*** நான்கனையுங் கூட்டியும்

"*ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென*"

எனத்தொடங்கும் நூற்பா (எண்.101)

உரை : அவற்றிற் ***கவ்வை*** யுறவுடைய

திருத்தம் : அவற்றிற்கு ***அவையுற*** வுடைய

"*வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்*"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.125)

உரை : அதனாற் பிறந்த ***நசைப்*** பொருளொடும்

திருத்தம் : அதனாற் பிறந்த ***நகைப்*** பொருளொடும்

உரை : அவை ***இலக்கியற்*** செய்யுளுட் காண்க.

திருத்தம் : அவை ***விலக்கியற்*** செய்யுளுட் காண்க.

"*அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்*"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.131)

உரை : யாண்டும் பொருளுணர்த்தல் வேண்டும்.

திருத்தம் : யாண்*டுமப்* பொருளுணர்த்தல் வேண்டும்.

"*தரவிய லொத்தும் அதனகப் படுமே*"

எனத் தொடங்கும் நூற்பா. (எண்.132)

உரை . ***இறுதி***யென்றது இடைநிலைப் பாட்டை

திருத்தம் : ***நிலை****யெ*ன்றது இடைநிலைப் பாட்டை

"*ஒத்துமுன் றாகும் ஒத்தா ழிசையே*"

எனத் தொடங்கும் நூற்பா (எண். 137)

உரை : எட்டும் ஆறும் நான்குமென்ற ***வண்ணத்தின்***

திருத்தம் : எட்டும் ஆறும் நான்குமென்ற ***வண்ணகத்தின்***

உரை : ஈரடியிரண்டும் ***வந்து*** தொடர்தலின்

திருத்தம் : ஈரடியிரண்டும் ***எண்ணொடு*** தொடர்தலின்

"*முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே*"

எனும் நூற்பா (எண்.139)

உரை : இருசீரை ***இரண்டிடை*** யெண்ணெனவும்

திருத்தம் : இருசீரை ***யிடை*** யெண்ணெனவும்

"*எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே*"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.140)

உரை : சின்ன வெண்ணொன்று நில்லாத விடத்து

திருத்தம் :சின்ன வெண்ணொன்றும் ***ஒழிந்து*** நில்லாத விடத்து

"*தரவின் றாகித் தாழிசை பெற்றும்*"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 143).

உரை : தேவபாணியின்றி யாப்பினும் வேறுபட்டு வருவனவற்றின்

திருத்தம் : யாப்பினும் ***பொருளினும்*** வேறுபட்டு வருவனவற்றின்

உரை : ஈண்டுந் ***தரவோசை*** பெறுவது

திருத்தம் : ஈண்டுந் ***தரவே*** பெறுவது

உரை : இதற்கு இல்லா ***ஆறுறுப்பையே*** கூறிற்று

திருத்தம் : இதற்கு இல்லாத ***உறுப்பையே*** கூறிற்று

உரை : இது ஓசையும் பொருளும் ***இனிதாக*** வந்தது

திருத்தம் : இது ஓசையும் பொருளும் ***இனிதாகாது*** வந்தது

"அம்போதரங்கம் அறுபதிற் றடித்தே"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.145)

உரை: ஒவ்வொரு பதத்திற்கும் ***இரண்டடியாகிய***

திருத்தம் : ஒவ்வொரு பதத்திற்கும் ***இரட்டியாகிய***

"தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.148)

உரை : ***வண்ணத்திற்***கோதிய உறுப்பமைய வாராதது

திருத்தம் : ***வண்ணகத்திற்***கோதிய உறுப்பமைய வாராதது.

"கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.153)

உரை : ***அவ்வரைவு***

திருத்தம் : ***அவை***

"எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்"

எனத் தொடங்கும் நூற்பா. (எண். 157)

உரை : முற்***கூறிய***

திருத்தம் : முற்***கூறி***

"நுண்மையும் சுருக்கமும் ஒளியு முடைமையும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.170)

உரை : சொற்றொடர் இனிது ***விளங்கா***தேனும்

திருத்தம் : சொற்றொடர் இனிது ***விளக்கா***தேனும்

"எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராதாகி"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.172)

உரை : ***சொல்லியலான்***

திருத்தம் : ***நாற்***சொல்லியலான்

"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்"

எனத் தொடங்கும் நூற்பா.(எண் 179)

உரை : இல்லது ***நடுக்க*** மயக்கந்தீர

திருத்தம் : இல்லது ***கடுத்த*** மயக்கந்தீர

"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.181)

உரை : ஒழிந்தோராகச் செய்யுள் செய்யப்பெறார்

திருத்தம் :ஒழிந்தோர் ***கூறினாராகச்*** செய்யுள் செய்யப் பெறார்.

"பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி"

எனத் தொடங்கும் நூற்பா. (எண்.189)

உரை : வரையார் என்றதனை

திருத்தம் : ***யார்க்கும்*** வரையார் என்றதனை'

உரை : இவர் கூற்று

திருத்தம் : ***அறிவர்*** கூற்று

"பரத்தை வாயில் எனவிரு கூற்றும்"

எனத் தொடங்கும் நூற்பா. (எண்.190).

உரை : கிழத்தியைச் ***சுட்டாவென***

திருத்தம் : கிழத்தியைச் ***சுட்டாவெனவே***

"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்று"

எனத் தொடங்கும் நூற்பா. (எண்.199)

உரை : ***அறியா*** மற்றான்

திருத்தம் : ***அறியு*** மாற்றான்

"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.220)

உரை : அடிக்கண்ணே பயின்று வருவது

திருத்தம் : அடிக்கண்ணே ***எண்ணுப்*** பயின்று வருவது.

"முடுகு வண்ண முடிவறி யாமல்"

எனத் தொடங்கும் நூற்பா (எண்.225)

உரை : ***இவை*** வேறுபாடு நோக்கி

திருத்தம் : ***இவ்***வேறுபாடு நோக்கி

"ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது"

எனத் தொடங்கும் நூற்பா (எண் 234)

உரை : ***ஓதல்*** வேண்டாமல்

திருத்தம்: ***தேர்தல்*** வேண்டாமல்

உரை : ***இவ்வைப்பு*** இனத்திற்குரிய வாதலின்

திருத்தம் ' ***இவை*** அவிநயத்திற்குரியவாதலின்

தொடர்ச்சி

அடுத்த இதழில்

இலக்கண நிறைவும் இலக்கண வரைவும்

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி–605008
கைபேசி · 94431 51044

கருவிக்கு என்று ஒரு தனிச்சிறப்பு இல்லை. அதற்கு உள்ள சிறப்பெல்லாம் அதைப் பயன்படுத்தும் மனிதன் மூலமாக அமைவதுதான். மொழியும் நமக்கு ஓர் கருவியே பேசுபவர் இன்றிப் பேச்சு இல்லை எனவே, பேச்சுக்கு அமைந்த சிறப்பெல்லாம் பேசுபவரைப் பொருத்ததாகும். இன்னொன்றையும் நாம் இங்கே கருத்தில் கொள்ள வேண்டும் பேச்சு அல்லது மொழியானது, தானே தனித்து இயங்கவல்லது அல்ல என்றாலும் அதற்கென்று ஓர் அமைப்பு உள்ளது. ஆக, மொழியைப் பற்றி ஆராய்வோர் அல்லது மொழிக்கு இலக்கணம் வகுக்க முற்படுவோர் பேசுபவர், பேச்சு இரண்டினையும் கருத்தில் கொள்ள வேண்டும் இந்த இரண்டினையும் கருத்தில் கொள்ளாத மொழிபற்றிய எந்தக் கோட்பாட்டையும் மொழியைப் பற்றிய உண்மைகள் அனைத்தையும் வெளிக்கொணரவல்ல ஒன்றாகக் கொள்வதற்கில்லை.

மொழிபற்றிய ஆராய்ச்சியானது பொதுவாக மொழியை மட்டுமே மையமாகக் கொண்டு இருந்துவந்த நிலையில் 1957–இல் சோம்ஸ்கி என்னும் அமெரிக்க மொழியியலறிஞர் ஒரு புதிய கண்ணோட்டத்தில் மொழியை அணுகமுற்பட்டார். மொழியாராய்ச்சியானது மொழியைப் பேசுபவரின் செயல்திறனை(Performance)மட்டும் கருத்தில் கொள்ளும் போது அது மொழியை மட்டுமே மையமாகக் கொண்ட ஒன்றாக அமைந்து விடுகிறது. இத்தகைய ஆய்வின் அடிப்படையில் அமையும் இலக்கணங்கள் பேசுபவருக்குள்ள மொழியாற்றலை வெளிப்படுத்தத் தவறிவிடுவதாகச் சோம்ஸ்கி கருதுகிறார். சோம்ஸ்கியின் மொழியியற் கோட்பாடானது பேசுபவரின் செயல்திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மொழியில் பேசுபவருக்குள்ள அறிதிறனுக்கே முதலிடம் தருகின்றது அறிதிறன் (Competence) அடிப்படையில் அமையும் மொழியாராய்ச்சி பேசுபவரை

மையமாகக் கொண்டதாகும். சோம்ஸ்கியின் இத்தகைய சிந்தனையானது மொழி பற்றிய உண்மைகளைப் புரிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிவதாகக் கருதலாம்.

தமிழைப் பொருத்தவரையில் இந்த மொழியில் தோன்றிய இலக்கணங்கள் பெரும்பாலும் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. தொல்காப்பியர் பேசிச்செல்லும் புணரியல் தொடர்பான பல செய்திகள் இந்த உண்மையை வலியுறுத்துவனவாகக் காணப்படுகின்றன. **வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு, ஒல்வழி ஒற்றிடைமிகுதல் வேண்டும்** (தொல்.எழுத்து.இளம்.115) என்ற நூற்பாவும் அகர உகரப் பேறுகள் பற்றிய நூற்பாக்களும், அத்து மற்றும் அக்குச் சாரியை பற்றிய நூற்பாக்களும், இந்த வகையில் கருத்தில் கொள்ளத்தக்கனவாகும். செயல்திறனைப் பின்புலமாகக் கொண்ட இலக்கணங்கள் புறநிலையில் காணப்படும் மொழியின் தோற்றத்தை மட்டுமே கருத்தில் கொள்கின்றன. இதனால்தான் **பொருநு வலிது** (=பொருந்–உ+வலிது), **பொருந வலிமை** (=பொருந்–அ+வலிமை), **வல்ல நாய்** (=வல்–அ+நாய்) ஆகியவற்றில் நிகழும் எழுத்துப்பேறுகளை **அம், உம்** ஆகிய சாரியைகளுடன் தொடர்புபடுத்த முடியாமல் போகின்றது. செயல்திறனைக் கருத்தில் கொண்ட இலக்கணங்கள் பேசுபவரைத் தவிர்த்து மொழியை மையமாகக் கொண்டதாக இருந்ததாலும் மொழிபற்றிய அமைப்பியல் சார்ந்த உண்மையை விளக்கத் தவறிவிடுகின்றது. காரணம் மொழியின் புறப்பரப்பை மட்டுமே இந்த இலக்கணங்கள் கருத்தில்கொள்கின்றன. இதனால்தான் **செருவக்களம்** என்ற தொடரை ஆராய்வது போல் ***வல்லப்பலகை*** என்ற தொடரையும் *தமிழச்சேரி* என்ற தொடரையும் ***பொருநுக்கடிது*** என்ற தொடரையும் தொல்காப்பியரால் ஆராயமுடியவில்லை. **சார்ங்கோடு** என்ற தொடரில் நிகழும் மெல்லொற்றுப் பேற்றினையும், ***சார்க்காழ்*** என்ற தொடரில் நிகழும் வல்லொற்றுப் பேற்றினையும் ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உட்படுத்த முடியாமற் போவதற்கும் இதுவே காரணமாகின்றது. இந்தக் குறைபாடுகளை எங்ஙனம் தவிர்ப்பது?

எழுத்தியல் ஆய்வில் அடிநிலையமைப்பு, புறநிலை வழக்கு என்று இரண்டு நிலைகள் உள்ளன. சில சமயங்களில் புறநிலை வழக்கும்

அடிநிலையமைப்பும் மொழியின் எழுத்தியல் அமைப்பினைத் தெளிவு படுத்துவதில்லை. சில எடுத்துக்காட்டுக்கள் மூலம் இதனைத் தெளிவு படுத்தலாம். ***வியாழக்கிழமை*** என்பது புறநிலை வழக்காகும். இதன் அடிநிலையமைப்பு ***வியாழன்+கிழமை*** என்பதாகும். நிலைமொழி வழக்கில் காணப்படும் ***வியாழன்*** என்ற சொல்லைக் கொண்டு ***வியாழக்கிழமை*** என்ற தொடரை வருவிக்கமுடியாது. காரணம், ***வியாழக்கிழமை*** என்ற தொடரில் காணப்படும் நிலைமொழி ***வியாழம்*** என்பதாகும். இந்தச் சொல் வழக்கில் இருந்தபோது வியாழக்கிழமை என்ற தொடர் தோன்றியமைந்தது. *வியாழம்* பின்னர் ***வியாழன்*** என்று திரிந்தமைந்தது. ***வில்லுப்பாட்டு*** என்பதன் அடிநிலையமைப்பு தொல்காப்பியர் ஆய்வுப்படி ***வில்+பாட்டு*** என்பதாகும். இந்த அமைப்பில் உகரப் பேற்றினையும் வல்லொற்றுப் பேற்றினையும் பெய்து ***வில்லுப்பாட்டு*** என்ற தொடரை வருவிப்பார் தொல்காப்பியர். ***எண்ணுப்பெயர், கள்ளுக்கடை, நெல்லுச்சோறு*** ஆகியவற்றுக்கும் இது பொருந்தும். ஆனால், இந்தப் புறநிலை வழக்குகளைத் தமிழ் எழுத்தியல் மரபுகளின் அடிப்படையில் நோக்குகையில் இவை அடிநிலை அமைப்புகளில் ***உம்*** சாரியையுடன் நிகழ்வனவாகும். ***வல்லப்பலகை, வல்லநாய்*** ஆகிய புறநிலை வழக்குகளைக் கொண்டு இவற்றின் அடிநிலை அமைப்பில் ***அம்*** சாரியையின் நிகழ்ச்சியை உறுதி செய்யலாம். ஆனால் தொல்காப்பிய ஆய்வு இதனின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த ஆய்வில் ***உம்*** சாரியைக்கோ ***அம்*** சாரியைக்கோ இடமில்லை. புறநிலை வழக்கு இல்லையானால் அடிநிலை வழக்கு இந்தச் சாரியைகளின் நிகழ்ச்சியை முன்மொழிய முடியாது.

மொழியை மையமாகக் கொண்ட ஆய்வானது புறவழக்கினைக் கருத்தில் கொண்டும் அமையலாம் அடிநிலை வழக்கைக் கருத்தில் கொண்டும் அமையலாம். புறவழக்கினைக் கருத்தில்கொண்டு அமையும் இலக்கண ஆய்வு புறநிறைவு (External Adequacy) நிலையிலும், அடிநிலை வழக்கினைக் கருத்தில் கொண்டு அமையும் இலக்கண ஆய்வு அகநிறைவு (Internal Adequacy) நிலையிலும் அமைகின்றன. தமிழில் தோன்றிய மரபிலக்கணங்கள் எல்லாம் புறநிறைவினவாகவே அமைந்துள்ளன. புறநிறைவுத் தன்மையதாகிய இலக்கண ஆய்வு, மொழியானது செயல்படும் பாங்கினை அதன்போக்கில் விளக்காமல் புறவழக்கில் காணப்படும்

கூறுகளை மட்டுமே கருத்தில் கொள்கிறது. இதன் விளைவாக ***வல்லப்பலகை*** என்ற தொடரில் நிலைமொழி–வருமொழிபோக எஞ்சியிருக்கும் உறுப்புக்களை ஒற்று அல்லது உயிர்ச்சாரியைகளாகக் கொள்ள நேர்கின்றது. இந்த ஆய்வைக் கருத்தில் கொண்டு இக்காலத்தமிழில் பயின்று வழங்கும், ***மகனுக்கு, மகளுக்கு, ஊருக்கு, கூழுக்கு*** முதலான நான்காம் வேற்றுமைப் பெயர்களை உகரப் பேற்றினையும் அதனையடுத்து வல்லொற்று மிகுதியையும் கொண்டவையாக ஆராய வேண்டியிருக்கும் இத்தகைய ஆய்வு, மொழியின் அமைப்பியல்பினை உள்ளது உள்ளபடி அறியமுடியாமல் செய்துவிடுகின்றது. ***செருவக்களம்*** என்ற தொடரை ஆராய்கையில் அங்கே ***அம்*** சாரியை நிகழ்வதாகக் குறிப்பார் தொல்காப்பியர். அவர் இந்தச் சாரியையில் நிகழும் மகரமெய் வல்லொற்றின்முன் கெட்டு இனவல்லொற்றாக மிகுந்தது என்று கொள்வார். தமிழில் மகரமெய்யானது சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வல்லொற்றின்முன் இனவல்லொற்றாகத் திரிவதும், பிறமெய்கள் மற்றும் உயிர்கள் முன் கெடுவதும் இயல்பாய் அமைந்த புணர்ச்சி மாற்றங்களாகும். ***வல்லப்பலகை, வல்லநாய், தமிழச்சேரி, பொருநுக்கடிது*** முதலான தொடர்களில் மகரமெய்யின் புணரியற் பண்புகளைத் தொல்காப்பியர் ஏன் கருத்தில் கொள்ளவில்லை என்று புலனாகவில்லை. தொல்காப்பியரின் இலக்கண ஆய்வின் அடிநிலை அமைப்புகளைக் கருத்தில் கொண்டு மாற்றியமைக்க முடியும். இத்தகைய ஆய்வில் அகர உகரப் பேறுகள் முறையே *அம், உம்* ஆகிய சாரியைகளின் திரிபாக அல்லது எச்சமாகக் கருதப்படும். அதேபோல் சந்தியில் வல்லொற்று மிகுதியும் மெல்லொற்று மிகுதியும் மகரப் பேற்றின் திரிபாகக் கொள்ளப்படும். ***அக்குச்*** சாரியை தவிர்க்கப்பட்டு ***அம்*** சாரியை கொள்ளப்படும். இக்காலத்தமிழில் இலக்கண ஆய்வு அகநிறைவுப் பின்னணியில் அமையும்போது ***மகனுக்கு, உனக்கு, புறாக்கள், புழுக்கள்*** முதலானவை பின்வரும் அமைப்பினவாகக் கருதப்படும்.

1. மகன்–உம்+கு>மகனுக்கு
2. உன்–அம்+கு>உனக்கு
3. புறா–ம்+கள்>புறாக்கள்
4. புழு–ம்+கள்>புழுக்கள்

தொல்காப்பிய ஆய்வின்படி சாரியையின் மகரம் அல்லது மகரப்பேறு கெட்டு வருமொழிமுதல் வல்லொற்று மிகும்.

கற்கள், முட்கள் ஆகியவை பேச்சுத் தமிழில் ***கல்லுங்கள், முள்ளுங்கள்*** என வழங்கும் இவற்றின் அமைப்பு ***கல்–உம்+கள், முள்–உம்+கள்*** என்பதாகும். இவற்றிலிருந்து ***கற்கள், முட்கள்*** ஆகியவை பின்வருமாறு வருவிக்கப்படும்.

5. கல்–உம்+கள்>கலுக்கள்>கல்க்கள்>கற்க்கள்>கற்கள்

6. முள்–உம்+கள்>முளுக்கள்>முள்க்கள்>முட்க்கள்>முட்கள்

மொழியின் அமைப்பியல்பு பற்றிய கோட்பாட்டுச் சிந்தனை காலந்தோறும் ஆய்வாளருக்கு ஆய்வாளர் மாறுபடலாம். இவற்றுள் எந்தக் கோட்பாடு மொழியின் கட்டமைப்பினை அதன்போக்கில் சென்று கண்டறிந்து புலப்படுத்துகிறது என்பதுதான் முக்கியம். ஓர் எடுத்துக்காட்டின்மூலம் இதனை விளக்கலாம்.

தமிழில் மெல்லொற்றுக்கள் குறிப்பாக மகரவொற்று மொழியிறுதி மெய்யாக நிகழும்போதோ, சாரியையின் உறுப்பாக நிகழும்போதோ ஒற்றுச்சாரியையாக நிகழும்போதோ வருமொழிமுதல் வல்லொற்றின் முன் வல்லொற்றாகத் திரிய வாய்ப்பில்லை. ஏனெனில், தமிழில் வல்லொற்றுக்கள் நிலையொலியன்களாகவும் (Voiceless phonemes) அலையொலியன்களாகவும் (Voiced phonemes) முரண்வழக்கில் நிகழ்வதில்லை. மாறாக, அலைவல்லொலிகள் (Voiced plosive phones) நிலையொலியன்களின் சார்ந்தொலிகளாக (Allophones) நிகழ்கின்றன. இதனைக் கருத்தில்கொண்டு மகரம் நிலைவல்லொற்றாகத் திரிவதை அதனைக் கெடுத்து வல்லொற்று மிகுவிப்பதன்மூலம் தொல்காப்பியர் புலப்படுத்துகிறார். இது ஓர் அற்புதமான எழுத்தியல் உத்தியாகக் கருதத்தக்கதாகும்.

இலக்கண ஆய்வு, மொழியை மையமாகக் கொண்டு அமைகையில் அது அகநிறைவுப் பண்பினைக் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மொழியின் அமைப்பியல்புகளையும், மொழி செயல்படும் நேர்த்தியினையும் புரிந்துகொள்ள முடியும். இத்தகைய ஆய்வு பேசுபவரின் மொழியின்மீது அவருக்குள்ள அறிதிறனைப் புலப்படுத்துவதாக அமையும்.

இலக்கண ஆய்வானது மொழியில் காணப்படும் அமைப்பியல்புகளைக் கண்டறியும் ஓர் முயற்சியாகும். எனவே இலக்கணம் என்பது ஆய்வாளரின் கண்டுபிடிப்பன்று. மொழியின் அமைப்பியல்புகள் காலந்தோறும் மாறியமைவனவாகும். இந்த மாற்றங்கள் மொழியில் தாமாகவே நிகழ்வதில்லை. இவற்றிற்குக் காரணமாக அமைவது சமுதாயமாகும். இந்தச் சமுதாயம் மனிதர்களைக் கொண்ட ஓர் கூட்டமைப்பாகும். எனவே மொழியில் நிகழும் மாற்றங்களுக்கு அதனைப் பேசுபவர்கள் காரணமாகின்றனர். மனிதசிந்தனையும், அறிவின் பரப்பும் மொழியை வெகுவாகப் பாதிக்கின்றன. இத்தகைய பாதிப்புகளை இலக்கணமானது பிரதிபலிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மொழியில் காணப்படாத மெய்ம்மயக்கங்களும், மொழி மரபுகளும் பிறிதொரு காலக்கட்டத்தில் இடம்பெறுவது இயல்பாகும். அப்படி இடம் பெறவில்லையென்றால் அந்த மொழி ஒன்று வழக்கற்றுப் போயிருக்க வேண்டும்; அல்லது அந்த மொழியைச் சார்ந்த சமுதாயம் கூட்டுப்புழுவாக இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லாத நிலையில் மொழியில் நிகழும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையாகும். இந்த மாற்றங்களுக்கு மொழியைப் பேசுபவர்கள் காரணமாக அமைவதால் இலக்கணமானது மொழியை மட்டும் கருத்தில்கொள்ளாமல் அதனைப் பேசுவோரையும் கருத்தில் கொள்ள வேண்டும். பேசுவோரைக் கருத்தில் கொள்ளும்போது உயர்திணையில் ஆண்பால் ஒருமை–பன்மை, பெண்பால் ஒருமை–பன்மை, உயர்பால், பலர்பால் என்று பால் எண்ணிக்கை பேச்சுத் தமிழில் ஆறாகும்; மரபிலக்கணங்களில் குறிக்கப்படாத பல மெய்ம்மயக்கங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

மொழி ஆய்வு அல்லது இலக்கணச் சிந்தனை என்று எடுத்துக்கொண்டால் இரண்டு வகையான சிந்தனைப் போக்குகளைக் குறிப்பிடவேண்டும். ஒன்று, மரபிலக்கணங்கள் கூறிச் செல்லும் விதிகளுக்குட்பட்டுதான் மொழி எக்காலத்திலும் இயங்குகிறது என்பதாகும். இத்தகைய சிந்தனையாளர்களால் மொழி வளர்ச்சிக்குச் சிறிதும் வாய்ப்பே இல்லை. இன்னொன்று, மொழியில் நிகழும் மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதாகும். இத்தகைய சிந்தனையாளர்களே தமிழுக்கு ஒரு புதிய இலக்கணம் வகுப்பதற்கு ஏற்புடையவர்களாவர். இவர்கள் வகுக்கும் இலக்கணமானது அகநிறைவுப் பின்னணியில் மொழியை மையமாகக் கொள்வதுடன் அதனைப் பேசுவோரையும் கருத்தில் கொண்டதாக அமையும். இத்தகைய இலக்கணமானது இலக்கு, அதனை அடையும் நெறி இரண்டையும் கருத்தில் கொண்டதாகும்.

திருக்குறளில் சுருக்கம்

தமிழாகரர் **தெ.முருகசாமி,** முன்னாள் முதல்வர்,
இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி,
புதுச்சேரி–605 009
கைபேசி : 97901 15625

சுருக்கம் என்ற சொல் மிக நுட்பமாய் உள்ளதைக் குறிப்பது. கதை, கட்டுரை போன்றவற்றைச் சுருக்கிக் கூறுவதை முன் கதைச் சுருக்கம், கட்டுரைச் சுருக்கம் எனச் சுருங்கச் சொல்வதைக் கூறுவர்.

பழமொழியாகிய முதுமொழிக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியர், "நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும்" விளங்கத் தோன்றுவதாக இருக்க வேண்டும் (செய்யுளியல்) என்கிறார். இதில் சுருக்கம் என்பதற்கு ஒரடி ஈரடியில் அரிய கருத்தைக் கூறல் என்பதாகப் பொருள் உணர்த்தப்பட்டது.

ஆக உரை நடைச்சுருக்கமும் செய்யுள் நடைச்சுருக்கமும் தமிழின் சிறப்பை உணர்த்தும் நிலையில் இக்கட்டுரை திருக்குறள் சுருக்கம் பற்றி வள்ளுவர் வழி உணர்த்த எழுதப்பட்டது.

சுருங்கக் கூறி விளங்க வைக்கும் நிலையிலேயே இலக்கண நூற்பாக்கள் (சூத்திரங்கள்) அமைந்ததை "ஆடி நிழலின் அறியத் தோன்றி" என்பதாகத் தொல்காப்பியம் செய்யுளியலில் கூறிற்று. பெரிய உருவம், கண்ணாடியில் சுருங்கிக் காணப்படும். அதுபோலச் சில்வகை எழுத்தில் பல்பொருள் விரிவை ஆல விதைபோல் அடக்கி மொழிவது சூத்திரமாம் சுருக்கம் எனலாம்

இந்த இலக்கணத் தொடர்ச்சியில் அணி இலக்கணமும் சுருக்கத்தைப் பாவிக அணியாகக் கூறுகிறது. "பாவிகம் என்பது காப்பியப் பண்பே" என்று இலக்கணம் கூறி அதற்கான எடுத்துக்காட்டாய்,

"பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப
பொறையிற் சிறந்த கவசம் இல்லை
வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை"

என்ற மூன்றைத் தண்டியலங்கார நூல் சுட்டுகிறது. இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் என்ற மூன்றன் சுருக்கம்–பாவிகமாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறைந்த அடி அளவில் வள்ளுவர் குறள் வெண்பா யாப்பைப் பயன்படுத்தியதே சுருக்கத்திற்கான பொருளாகும்.

"முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்,
வேல்உண்கண், வேய்த்தோள் அவட்கு" (1113) என்ற குறள்

ஐம்புலநுகர்வைச் சுருக்கமாக உவமை வழி உணர்த்திய பாங்கானதாகும். இதில் உவமஉருபின்றி உவமான உவமேயப் பொருள்கள் நிரல்படுத்தப்பட்ட வகையில் அவட்கு என ஒருத்தியான எழுவாயைச் சுட்டிய சுருக்கத்தை என்னென்பது?

இப்படிப் புறநிலையில் பலவற்றை உணரும் சுருக்கக் குறிப்புகளுடன் பாடப்பட்ட குறள்களுக்குள் சுருக்கத்திற்கான பொருள் நுட்பமுடன் பாடப்பட்ட குறள்களும் பலவாக உள்ளன.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்" (649)

இக்குறள் சொற்சுருக்கத்தை உணர்த்துவதாகும். சுருக்கமாய் சிலவற்றைக் கூறத் தெரியாதவர் பெருக்கமாய்க் கூறித் துன்புறுவர், பெருக்கமாகக் கூறித் துன்புறுவதற்குக் காரணம் யாதெனில் அவா காரணமாகக் கொண்ட மன உணர்வேயாகும். சில சொல்ல விழையும் போது அறிவின் கூர்மை வெளிப்படும் என்பது கருத்து.

இப்படிப் பேசுவோர் சுருக்கமாகப் பேச வேண்டும் எனச்சுட்டும் வள்ளுவர் பேசுவதைக் கேட்போரும் சுருக்கமாகக் கேட்டுத் தெளிய வேண்டும் என்கிறார்.

"நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (419)

கூர்மையாகக் கேட்கும் அறிவுடையவர் மட்டுமே அடக்கமாகப் பேசும் ஆற்றல் பெற்றிருப்பார். இதில் பேசுவோரும் கேட்போரும் கூரிய

சுருக்கக்கேண்மையாக இருத்தலை வள்ளுவர் ஒரு சேரக் கூறியது அதி அற்புதமாகும். கூறலும் கேட்டலும் திட்ப நுட்பம் உடையவை என்பது கருத்து.

இங்ஙனம் சுருக்கத்திற்கான சொற்பொருள் விளக்கத்தைப் பரவலாகக் கூறும் வள்ளுவர் "சுருக்கம்" என்ற சொல்லைப் பொருள் வருவாய் சுருங்கிய வாழ்க்கையின் வறுமையைக் கருத்தாகக் கூறுவது ஓர் உன்னதமாக உள்ளது.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய

சுருக்கத்து வேண்டும் உயர்வு" (963)

செல்வம் பெருகிய போது பணிவும், அதுவே சுருங்கிய போது இல்லாமை இயலாமை முதலியவற்றை வெளிக் காட்டிக் கொள்ளாத பெருமிதம் வேண்டும் என்கிறார் வள்ளுவர். சுருக்கம் என்ற சொல்லுக்கு வறுமை என்ற கருத்தில்லையானாலும் பொருள் வருவாய் இல்லாததால் தீயன செய்யும் மனநிலைக்கு ஒருவர் ஆளாகிவிடக்கூடாதென்ற குறிப்பை உணர்த்தும் விதமாகவே இக்குறள் "சுருக்கம்" என்ற சொல்லுக்குத் தெளிவுரை கூறுகிறது. இதைத்தான்,

"இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற

புன்மையில் காட்சி யவர்" (174)

என்பதாக வள்ளுவர் கூறினார் போலும்! இதே தொனியில்தான்,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க

சான்றோர் பழிக்கும் வினை" (656)

எனப்பட்டது. ஆக சுருக்கம் என்பது இல்லாமையால் வருவதானாலும் அது மனச்சுருக்கத்தால் பொல்லாங்கைச் செய்துவிடத் தூண்டாத பண்பை உடையதாக இருக்க வேண்டும் என்பது கருத்து.

இதனையே வேறு வகையாகச் சொன்னால் உடலின் தோல் சுருக்கத்தினும் மனத்தின் எண்ணச் சுருக்கம் (இழி குணம்) பெருந் துன்பத்தைத் தரும் என்பதாம்.

இதற்கேற்பவே வள்ளுவர் விருந்தோம்பலில், அனிச்ச மலரைக் காட்டி உண்மையை உணர்த்தினார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (90)

மிக மெல்லிய அனிச்சமலர் முகர்ந்த அளவில் வாடிவிடும் வீட்டார் சற்றே முகம் திரிந்து நோக்கினால் வந்த விருந்தினர் வாடிவிடுவராம். மனம் சுருங்கினாலன்றி வீட்டார் மனந்திரிந்து நோக்கமாட்டார் என்பதால் மனச்சுருக்கம், முகவாட்டத்தால் அல்லது குறிப்பால் அறியப்படும். முகமானது அடுத்தது காட்டும் பளிங்கு (706) போன்றது என்பதால் வீட்டாரின் மனச் சுருக்கம் முகத்தின்வழி அறியப்பட்டு வந்த விருந்தினரின் உறவைப் பெருக்காமல் சுருக்கிவிட்டது.

இந்தக் குறளில் எதிர் எதிர் உள்ள இருவரின் மனச்சுருக்கம் உணர்த்தப்பட்டதை ஒரு வகை உளவியலாக உணரலாம். விருந்தோம்பலை விரும்பாத மனநிலை, விருந்து கொள்ளுதலை விரும்பாமை செய்துவிட்டது.

இப்படியாக மனச்சுருக்கத்தோடு கருத்தை உணர்த்திய வள்ளுவர் மனத்தில் எழும் காதல் உணர்வோடு கண்ணைச் சுருக்கிப் பார்ப்பதில் வாழ்க்கையின் எழுச்சி துளிர்ப்பு உள்ளதாக,

"குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்." (1095)

என்ற குறளால் உணர்த்தினார். ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்த்த பார்வை தான் வாழ்க்கைக்கு வெளிச்சம் காட்டியது. எனவே சுருக்கம் என்பது நோக்கத்தைப் பொறுத்து விரியவும் சுருங்கவுமாக இருக்கும் எனத் தெரிகிறது.

வள்ளுவர் உணர்த்தும் பல்வேறு சுருக்கங்களுள் தொழில் சுருக்கம் என்ற ஒன்றைக் குறிப்பிடுவது காலத்தொடு ஒட்டிய கருத்தாக உள்ளது. உழவினார் கைம் மடங்கின் இல்லை (1036) என்ற குறள் உழவுத் தொழில் சுருக்கத்தை உணர்த்துகிறது. உழவுத்தொழில் ஒடுங்கிச் சுருங்கு வதற்குரிய காரணத்தை வள்ளுவர் வான் சிறப்பு அதிகாரத்தில்

“ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்” (14)

என வானம் மழை பெய்யாமல் சுருங்கி விட்டால் உழவுத் தொழில் நடைபெறாதென்பது வள்ளுவர் கருத்து.

வான்சிறப்பு அதிகாரத்தில் மழை இல்லாத சுருக்கத்தைக் கூறி விட்டாலும் உழவு அதிகாரத்தில் மழை பெய்யாததோடு வேறுவகையான காரணங்களால் உழவுத்தொழில் சுருங்குவதைக் கைம்மடங்கின் என்ற சொல்லால் உணர்த்தினாரோ வள்ளுவர் என எண்ணத் தோன்றுகிறது. கைம் மடங்கின் என்றால் “உழவரது கை உழாது மடங்கி விடுமானால்” – என்பது பொருள். கை என்றால் செயல். உழவினார்கை–என்பது உழவுத்தொழில். மடங்கின்–சுருங்கின். வான்சிறப்பின்மையால் உழவுத் தொழில் நடைபெறாது என்றபோதே எல்லாம் அதனுள் அடக்கம். ஆனால் பொருட்பாலின் உழவு அதிகாரத்தில் கைம் மடங்கின் எனக் கூற வேண்டியதில்லையானாலும் உழவுத் தொழில் நசிவதற்கு ஒரோவழி அரசும் காரணமாகும் என்பதை நினைவூட்டலாகவே அரசு பற்றிய பொருட்பாலில் கூறினார் போலும்.

இந்த உண்மையையே முனைவர்.க.ப.அறவாணன் இக்குறட்குப் பொருள் கூறியது சிறப்பாக உள்ளது. “உழவர் இனி உழவுத் தொழிலைச் செய்வதில்லை என்று வேலை நிறுத்தம் செய்வராயின் உலகின் எப்பிரிவினர்க்கும் வாழ்வு இராது” என்பது க.ப.அ. அவர்கள் கருத்து. இது இக்கால வேலை நிறுத்தத்தை மறைவாகப் பதிவு செய்வதாகவும் கூறுகிறார்.

பாயிரப் பகுதியில் வான்சிறப்பில் உழவு பற்றிக் கூறியது பொதுவாயினும் பொருட்பாலில் கூறியதைச் சிறப்பாகக் கருத வேண்டும். அதாவது புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் என்ற போதே (14) உழவர் உழாது கைம்மடங்குவர். ஆயினும் அதே கருத்தைப் பொருட்பாலில் கூறும் போது வேளாண்தொழில் செய்யும் சிறு, குறு உழவர்கள் (விவசாயி) பெற்ற பயிர்க்கடன் போன்றவற்றை அரசுக்குச் செலுத்த முடியாதபடித் துன்பம் நேரும்போது “வேலொடு நின்றான் இடு” என்னும் (552) போதும்; உரம், பூச்சிக் கொல்லி மருந்து முதலிய உழவுக்கான பொருளின் விலை ஏற்றத்தாலும்; உழவுத் தொழிற் கருவிகளின் விலை கூடுதலானும் அரசால்

உழவுத் தொழிலுக்குப் பாதகம் ஏற்படும்போது உழவினார் கைம் மடங்கும். இம்முடக்கம், மழையின்மையான இயற்கையோடு செயற்கையாய் அமைந்ததாகும்.

மேலும் மொழி வாரி மாநிலங்கள் இந்தியாவில் பிரிக்கப்பட்ட போது **(1956)** தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அண்டை மாநிலங்களிலிருந்து உற்பத்தியாகித் தமிழகத்தில் பாய்ந்த நதிகளின் தண்ணீர் வரத்து குறைந்து விட்ட காரணத்தால் உழவுக்குரிய நீரைப் பெற்றுத்தர அரசோடு நடத்தும் பேச்சுவார்த்தை, போராட்டம் முதலியவற்றாலும் உழவினார் கைம்மடங்கும். ஆக உழவுத்தொழில் சுருங்கின் உலக வாழ்வு சுருங்கும் என்ற கருத்தைத் திருவள்ளுவர் நனி நாகரிகமாக உணர்த்தினார் எனலாம் இதனால் தற்காலத்தில் உழவுத் தொழில் தொடர்பாக நடக்கும் போராட்டத்தால் உழவுத் தொழில் சுருக்கம் பற்றிய கருத்தைத் தொலை நோக்கிய வள்ளுவரது பார்வையாக உணர முடிகிறது எனவே வள்ளுவத்தில் சுருக்கம் என்பதை மிக நுட்பமாக உணர வேண்டும் எனலாம்.

பொதுவாகத் திருக்குறள் வழி சுருக்கத்தைப் பற்றி உணரும்போது இருவேறு வழியில் உணரலாம் 1. விரிந்ததன் அடக்கம் – சுருக்கம். 2. அடக்கமின்றி விரிவில்லாதது சுருக்கம்.

பெரிய ஆலமரம் மீன் முட்டையினும் சிறிய விதைக்குள் அடக்கம்– சுருக்கம். சுருங்கிய பிறைக்குள் முழுநிலா (பௌர்ணமி) அடக்கம்– சுருக்கம்.

மேற்கண்ட கருத்தைத் தத்துவமாக உணர்கையில் “சுருங்கியது விரியும்; விரிந்தது சுருங்கும்” எனலாம். இதைத்தான் இடைக்கால ஔவையார் “அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்” –என்றார். அணுவே அண்டம்; அண்டமே அணு–என்று கருதும் அளவில் சுருங்கிய பாவடிவிலான திருக்குறளில் கருத்துக்கள் சுருங்கியும் விரிந்தும், விரிந்தும் சுருங்கியுமாக உள்ளனவாம் என்க!

தொல்காப்பிய மரபில் அக இலக்கிய அறக் கொள்கைகள்

திருமதி. **வாசுகி ஜெயரத்னம்,**
பேராசிரியர், (பணிநிறைவு), தமிழியல் துறை,
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்)
மதுரை–625 006
தொலைபேசி : 0452–2483564
கைபேசி : 94420 89315

அறம் என்பதற்கு நடத்தை, ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் முதலிய பொருள்கள் பதிவாகியுள்ளன.

"மக்கள் தாமே ஆறறிவுயிரே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே" (1523)

என்று, ஆறாவது அறிவாகிய பகுத்தறிவையே அவற்றொடு மனனே என்று குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். மனிதன் நன்நெறிகளைக் கடைப்பிடித்துத் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதை அறம் என்று கொள்ளலாம்.

அகப்பாடல்கள், களவு, வரைவுகடாதல், இற்செறிப்பு, வெறியாட்டு, மடலேறுதல், அறத்தொடு நிற்றல், திருமணம், உடன்போக்கு, சூளுரைத்தல், பொருள்தேடல், விருந்தோம்பல் ஆகிய அகநெறிகளை வெளிப்படுத்துகின்றன.

தனிமனிதனையும் சமுதாயத்தையும் நெறிப்படுத்தும் ஒழுக்க நெறி அறம் எனப்படுகிறது மனித வாழ்க்கையில் இயல்பாகக் காணக்கூடிய ஒழுக்கம் நடத்தை முறை, பழக்க வழக்கம், நம்பிக்கை ஆகியன உலகியல் வழக்காகக் கருதப்படுகிறது. அவ்வுலகியல் வழக்கில் சிறந்தனவாகவும் உயர்வானவையாகவும் உள்ளவற்றைச் சான்றோர்கள் இலக்கியப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளனர். இதனையே தொல்காப்பியர்,

"வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே"

(தொல்.பொ.465)

என்னும் நூற்பாவின் வழி மக்கள் தம் வாழ்க்கையை அகம் புறம் என இரண்டாகப் பிரித்து அறநெறி பிறழாமல், வாழ்ந்ததைக் குறிப்பிடுகின்றார்.

அறஞ்செய்தலாவது இல்லாதவர்களுக்குத் தம்மால் இயன்றவை களைக் கொடுத்து உதவி செய்தலாகும். அறஞ்செய்தால் ஆக்கம் உண்டு. அறம் செய்யாவிடின் கேடுண்டு. இம்மை வாழ்வும் மறுமை வாழ்வும் வளம் பெற வேண்டுமானால் அறம் செய்தல் வேண்டும் என்று தண்டலையார் சதகம் (42) குறிப்பிடுகின்றது.

"அறநெறி இதுவென தெரிந்தே" (ஐங். 371)

இதில் தாய் தனது மகளின் உடன்போக்கை இயல்பாகக் கருதுகிறாள் என்பது அக வாழ்க்கையின் அறம் எனக் கருதப்படுகிறது.

"ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது மறைபிறர் அறியாமை
நிறைவெனப் படுவது கண்ணோ டாதுயிர் வெளவல்
பொறை யெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"

என்னும் நெய்தற்கலிப் (133) பாடல், அறம் என்னும் சொல்லுக்கு விளக்கமளிப்பதாய் அமையும்.

அரசவை ஊரவை ஆகிய அமைப்புகள் அக்காலத்தில் நீதி வழங்கின. ஊரின் அமைதிக்கு ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் காரணமாயிருந்தனர். சமூகத்தில் அறம் நிலைப்பதற்கு குற்றம் நீங்கிய சான்றோர் பணியில் அமர்த்தப்பட்டனர் என்பதை,

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீங்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோலன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூற வையமும்"

'ம.கா.பா.அ.489-492)

என்று மதுரைக் காஞ்சிப் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. இக்கருத்துக்கள்,

"வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே"

(தொல்.பொருள்.நூ.21)

என்னும் நூற்பாவிற்கு அரண் செய்வதாக அமையும். தொல்காப்பியர் பாவகைகளுக்கு இலக்கணம் கூறும் முகத்தான், அவை, "அறம் முதலாகிய மும்முதற்பொருட்கும் உரிய" என்றார். களவுக்கு விளக்கம் கூறவந்த அவர் இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றார். தமிழ் இலக்கியம் அறஅடிப்படையிலேயே கால் கொண்டு நிற்பதால் அவை அனைத்திலும் அறக்கருத்துக்கள் ஊடுருவி நிற்கின்றன.

அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பொருள்களுள் அறமே முதலிடம் பெறத்தக்க சிறப்பு வாய்ந்தது என்பதனைத் தொல்காப்பியர்,

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
மும்முறை பொருட்கும் உரிய என்ப"

என்று குறிப்பிடுகிறார்.

அக அறம் :

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

இதன்படி,

அகவாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படும் அறங்களை அறத்தொடு நிற்றல் நிலை என்னும் துறைவழி விளக்குகிறார்.

அகவாழ்வில் கூற்றுக்குரியவர்களாகக் கருதப்படுவோர் அனைவரும் அறக்கோட்பாட்டின் வழியே தம் கூற்றுக்களை நிகழ்த்துகின்றனர். தோழி அறத்தொடு நிற்கும் பொழுது,

தலைவியின் குடிப்பிறப்பு, நாணம், கற்பு முதலிய பெருமைகட்கும் செவிலியின் அறிவிற்கும், தலைவனின் அறிவு, நிறை, ஒப்பு, பொருள்தன்மைக்கும் தனது காவலுக்கும் தவறு நேராதபடி முரண்பாடில்லாத மொழிகளால் தோழி செவிலிக்கு அறிவுறுத்தல் மரபாகும். அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும்

சொல்வன்மை, தீதொரீஇ நன்றியின்பால் உய்க்கும் நல்லறிவு பெற்றவள் தோழி. அவள் ஏழு வகையால் களவொழுக்கத்தை வெளிப்படுத்துவாள் அவை,

1. தலைவன் தன்னிகரற்றவன்

2. இளையோரிடம் எளிமைகாட்டுபவன் எனவே அவன் அருளும் சிறப்பும் உடையவன் எனப் புகழப்பட்டான்.

3. தலைவன் தலைவியின் அன்பு

4. தலைவனுக்கே தலைவியை மணமுடித்தல்–குறிப்பு

5. வேலன் வெறியாட்டுதலைத் தடுத்தல்

6. தன் கருத்தன்றித் தலைமகளைக் காணமாட்டான்

7. இயற்கைப் புணர்ச்சி – உண்மையைக் கூறுதல்

களவு ஒழுக்கம்–அறத்தொடு நிற்றல் :

களவொழுக்கம் கற்பொழுக்கமாக மாறுவதற்குத் துணை நிற்பது அறத்தொடு நிற்றல் நிலை ஆகும்.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் களவியலிலும் பொருளியலிலும் அறத்தொடு நிற்றலைப் பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளார். களவொழுக்கத்தில் தலைமகள்பால் தோன்றும் உள்ள நிகழ்ச்சியினையும், கூற்று நிகழும் இடங்களையும் தொகுத்துக் கூறும் நூற்பாவில்,

"மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்று வரைவுவரின் அது மாற்றுதற் கண்ணும்

....

வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்"

(தொல்.கள நூ.21)

என்ற வரிகள் அறத்தொடு நிற்கும் செய்திகளைத் தருகின்றன.

தோழி தன்னை வினவாத நிலையில், தலைமகள் தானே முற்பட்டுத் தனது களவினைத் தோழிக்குக் கூறுமிடங்களாக,

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே" (தொல்.கள.நூ.22)

என்று கூறியுள்ளார்.

"பிறன் வரைவாயினும் அவன் வரைவு மறுப்பினும்
முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன்பட்டோர்க் கடாவல் வேண்டினும்
..............................* (தொல்.கள.நூ.24)

என்பதாக அறத்தொடு நிற்றல் நிலையின் விரிவினைக் கூறுகிறது நூற்பா.

"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப"

என்னும் இறையனார் களவியலுரை, களவொழுக்கம் இரண்டு திங்கள் கால எல்லைக்கு மீறலாகாது என்ற விதியைக் கூறுகிறது.

உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டவர்கள் மணம் புரிந்து கொள்ளும் காலம் வரை மறைந்து ஒழுகும் வாழ்க்கையைக் களவு என்பர். களவு என்பது திருமணத்திற்கு இட்டுச் செல்லும்போது அது நன்னெறியாகப் போற்றப்படுகிறது களவு வாழ்க்கையில் இன்பம் நுகரும் தலைவனை, கற்புவாழ்வில் ஈடுபடும்படி தோழி வற்புறுத்துவதே வரைவுகடாதலாகும் இவ்வரைவு கடாதல் தலைவனுக்குத் தோழி மூலம் அறநெறியை உணர்த்துமாறு அமைந்துள்ளது.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது நலனே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே"

என்னும் நற்றிணைப்பாடல் (172). பகற்குறி வந்தொழுகும் தலைமகனைத் தோழி வரைவு கடாவும் குறிப்புத் தோன்றக் கூறியதாக அமைந்துள்ளது.

"நிரந்திலங் கருவிய நெடுமலை நாடன்
இரந்து குறை யுறாஅன் பெயரின்
என்னாவது கொனம் மின்னுயிர் நிலையே"

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் (225) தோழி அறத்தொடு நின்ற நிலையை உணர்த்தும்.

களவுக்காலத்தில் இறுதியாக நடைபெறும் நிகழ்ச்சி அறத்தொடு நிற்றலாகும். அறத்தொடு நிற்றல் என்பது உண்மையை வெளிப்படுத்துதலாகும். தோழி அறத்தொடு நிற்கும் முயற்சியினைக் குறிஞ்சிப்பாட்டு தெளிவாக உணர்த்தும்.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலங்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்" (குறிஞ்.பா.13–14)

தலைவி அவள் விரும்பியவனுக்குத் திருமணம் செய்து கொடுக்காவிடில் இறப்புவரை இத்துன்பத்தைப் பொறுத்துக் கொள்வாளே தவிர இன்னொரு திருமணத்திற்கு உடன்படமாட்டாள் என்று உறுதியாகக் கூறுகிறாள் தோழி.

இவ்வாறு முறைப்படி களவொழுக்கத்தை வெளிப்படுத்துதலை அறமாகக் கருதினார் தொல்காப்பியர். எனவே, தோழி என்பவளும் தலைவன், தலைவி களவு வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெற்றாலும் அவளது செயல்கள் யாவும் அறத்தொடு காணப்பட்டன. இதன்வழி தொல்காப்பியர் அகத்தின் நெறிகளை அறக்கோட் பாடாக்குகிறார் என்பதை அறிய முடிகிறது.

இல்லற அறத்தை

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்" (பொருள்.133)

என்றார் காப்பியர். இதனை

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்,
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே"

(நற்.142 இடைக்காடனார்)

என்ற நற்றிணைப்பாடல், வினைமுற்றி மீளும் தலைவன் தன் தலைவியின் பண்பினை விதந்து கூறியதை வெளிப்படுத்தியுள்ளது.

நிறைவுரை:

தொல்காப்பியர் மரபில் சங்க இலக்கியங்களில் காணப்படும் களவு கற்பு என்னும் இரு கைகோள்களிலும் அறம் அடிப்படையாகத் திகழ்கிறது. சங்க காலச் சமுதாயம் களவொழுக்கத்தைக் கற்பிற்கு இட்டுச் செல்லும் நன்னெறியாகப் போற்றியது. கற்பென்பது திருமணம் மட்டுமன்று; களவில் தலைவனுடன் உடன்போக்குப் போவதும் தலைவன்பால் கொள்ளும் அன்பும் தலைவியின் அறக்கற்பு என்று சொல்லப்பட்டது. அறத்தை அடிப்படையாகக் கொண்ட இல்வாழ்க்கையில் அன்பும் விருந்தோம்பலும் சுற்றம் ஓம்பலும் உயர்ந்த அறங்களாகப் போற்றப்பட்டன.

சங்கச் செய்திகள்

03 04.2017 அன்று முற்பகல 11.30 மணியளவில் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளநிலை ஆய்வாளர் ஜெ.சண்முகப்பிரியா தமது உரையில "ஔவை துரைசாமிப்பிள்ளை அவாகள் சங்க இலக்கியங்கள் பலவற்றுக்குத தெளிவான உரை எழுதித் தமிழக மக்களால நன்றியோடு நினைக்கப்படடவா, *'உரை வேந்தர்'* என்ற சிறப்புக்குரியவா, கம்பீரமான தோற்றமும் கணீரென்ற குரல் வளமும் கொண்டவா, சிறந்த மேடைப் பேசசாளா; தமிழ்ப் பற்றையும் சைவப் பற்றையும் தம்மிரு கண்களாகக் கொண்டவா, ஓர் உரையாசிரியராக அவருடைய தமிழ்ப்பணி இமயத்தைக் காடடிலும் உயர்ந்தது" என்று குறிப்பிட்டாா இந்நிகழ்வில் கலலூரி முதல்வர், துணைமுதல்வா, உதவிப் பேராசிரியாகள், நூலகா மற்றும் மாணவாகள் கலநது கொண்டனர் முன்னதாக ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

08 04.2017 அன்று பாணடியன நூலகததில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற சிறப்பு மாதாந்திரச் சொற்பொழிவில் தமிழறிஞா இளங்குமரனாா "தமிழின் தனிப்பெருஞ்சிறப்பு" என்ற தலைப்பில் உரையாற்றினாா. நிகழ்ச்சிககுச் சங்கச் செயலாளர் வழக்குரைஞா திரு ச.மாரியப்ப முரளி அவர்கள தலைமை வகித்தார் இந்நிகழ்ச்சியில் முதுமுனைவர் இரா இளங்குமரனாரின் வாழ்வும் பணியும் எனற பொருணமையில் ஒளி ஒலிக் காட்சிகள் திரையிடப்பட்டன. அவருடைய இளமைககாலம், கல்வி, மணவாழ்வு, ஆசிரியப்பணி, பதிப்புப்பணி, தமிழ்ப்பணி குறித்த விரிவான செய்திகள் அதில் இடம் பெற்றிருந்தன. அதன் பின்னர்ப் பேசிய இளங்குமரனார், 'பேரவைச் செம்மல், முதுமுனைவர், திரு.வி.க விருது, தமிழன்னை விருது, உளளிட்ட ஐம்பதிற்கும் மேறபட்ட விருதுகளைப் பெற்ற பெருமைக்குக் காரணம் தமிழே. தமிழ் ஒன்றே உயர்வுக்கு வழி, முயன்றால முடியாதது என எதுவுமில்லை" என்று கூறினார் துணைமுதல்வர் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர்

மா.செல்வத்தரசி ஆகியோர் முறையே வரவேற்புரை மற்றும் நன்றியுரை நல்கினர். பேராசிரியர்கள், நூலகர், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

13.04.2017 அன்று மதுரை செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியின் 60ஆம் ஆண்டு விழா, விளையாட்டு மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட நிறைவுவிழா என முப்பெரும் விழா நடைபெற்றது. கல்லூரிச் செயலர் திருமிகு.இராணி இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமையும் சங்கச் செயலர் வழக்குரைஞர் திருமிகு.ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலையும் வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காவல்துறை முன்னாள் கண்காணிப்பாளர் அ.கலியமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தமது சிறப்புரையில் கல்வியின் அவசியம் குறித்துச் சங்க இலக்கியங்களிலும் அற இலக்கியங்களிலும் வலியுறுத்தப்படும் பாடல் வரிகளை மேற்கோள் காட்டி எடுத்துரைத்தார். மேலும், 'ஏழைகளுக்குக் கல்வி மிகச் சிறந்த செல்வம்; செல்வந்தர்களுக்குக் கல்வி என்பது அணிகலன்; பெண்களுக்குக் கல்வியானது பாதுகாப்பு அரண். வாள் வலிமையைக் காட்டிலும் நூலின் வலிமையே சிறந்தது. வாள் கூர்மை மழுங்கினாலும் நூலால் பெற்ற அறிவு என்றுமே குறைவதில்லை' என்று குறிப்பிட்டார். முதல்வர் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார். துணைமுதல்வர் அவர்கள் வரவேற்புரை நல்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி அவர்கள் நன்றியுரை கூறினார். இலக்கிய, விளையாட்டு மற்றும் கலைப் போட்டிகளில் சிறப்பிடம் வகித்த மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

21.04.2017 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் பாரதிதாசன் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. உதவிப்பேராசிரியை முனைவர் பூ.பூங்கோதை தமது உரையில் "பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்ட சிறப்புக்குரியவர்; தமிழாசிரியர்; கவிஞர்; அரசியல்வாதி; இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சியளிக்கும்; புதுவையிலிருந்து வெளியான தமிழ்

ஏடுகளில் 'கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன்' எனப் பல புனை பெயர்களில் எழுதி வந்த படைப்பாளர்; 'பிசிராந்தையார்' நாடக நூலுக்காக 1970இல் சாகித்திய அகாடமியின் விருது பெற்ற சிறப்புக்குரியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகப் பாரதிதாசன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

24.04.2017 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் வ.சுப.மாணிக்கம் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியை முனைவர் ஜெ.கோகிலா தமது உரையில், "வ.சுப.மாணிக்கம் அவர்கள் தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழகத்திற்கும் பல்லாண்டு காலம் நிலைத்த தொண்டாற்றியவர்; 'தமிழ் வழிக் கல்வியியக்கம்' கண்டவர்; தமிழுக்குப் புதிய பல சொல்லாக்கங்களையும் உவமைகளையும் படைத்துத் தருவதில் தனி ஈடுபாடு உள்ளவர்; ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரைநடை, கடித இலக்கியம் எனப் பலவகை நூல்களை வெளியிட்டுத் தமிழ் இலக்கிய இலக்கண ஆய்வு உலகில் தனித்துவம் பெற்று விளங்கியவர்" என்று கூறினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக வ.சுப.மாணிக்கம் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

25.04.2017 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் ரா.பி.சேதுப்பிள்ளை மற்றும் ச.தண்டபாணி தேசிகர் ஆகியோரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. உதவிப்பேராசிரியை முனைவர் மா.செல்வத்தரசி, "ரா.பி.சேதுப்பிள்ளை வழக்கறிஞராக இருப்பினும் தமது தமிழ்ப்பற்றால் தமிழ்த்தொண்டாற்ற முன்வந்தவர்; 'சொல்லின் செல்வர்' என்ற பட்டம் பெற்ற சிறப்புக்குரியவர்; இனிய நடையும், கையாளும் சொற்களும், ஆய்வுக் கருத்துகளைப் பற்றி அழகாக எடுத்துரைப்பது இவரது தனிச்சிறப்பாகும். தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, சாகித்திய அகாடமி பரிசு போன்ற பல்வேறு பரிசுகளைப்

ஜூன் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வெள்ளைவாரணர்
(ஜூன் 13 - 1988)

அண்ணாமலைச் செட்டியார்
(ஜூன் 15 - 1948)

கவிஞர் சுரதா
(ஜூன் 19 - 2006)

ச.மெய்யப்பனார்
(ஜூன் 28 - 2004)

(கோ)விந்தன்
(ஜூன் 30 - 1975)

புதுமைப்பித்தன்
(ஜூன் 30 - 1948)

பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.வெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்,
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
THE SECRETARY,
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001.
Tamilnadu.

Book Post

பெறுநர் / To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. **0452 - 2343707**
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை – 625 020. அலைபேசி : **94874 45403**
அச்சிட்டோர்: **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை–1.
அலைபேசி : **97894 95738**